செ.வெ.எண் : 691

7.10.2009

செய்தி வெளியீடு

# முல்லை பெரியாறு – புதிய அணை - மத்திய அரசின் ஆணைக்கு தடை கோரி தமிழக அரசு உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், முல்லைப் பெரியாற்றில், கேரள அரசு புதிய அணை கட்டுவது தொடர்பாக ஆய்வுப் பணிகளை தமிழக அரசை கலந்தாலோசிக்காமல், எவ்வித முடிவும் எடுக்கக் கூடாது என்று மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் திரு. ஜெயராம் ரமேஷ் அவர்களை, 22.9.2009 நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து, மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு ஆ. இராசா அவர்கள், மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து, கேரள அரசிற்கு அனுமதி வழங்கக் கூடாது என்பதை வலியுறுத்திய பிறகும், மத்திய அரசு இதற்கான அனுமதியை 6.10.2009 அன்று வழங்கியுள்ளது.

இதனை எதிர்த்து, தமிழக அரசு, இன்று (7.10.2009) மத்திய அரசு புதிய அணைக்கான ஆய்வு நடத்த அனுமதி அளித்ததற்கு தடை விதிக்கக்கோரியும் மற்றும் கேரள அரசு ஆய்வு மற்றும் சர்வே பணிகளை மேற்கொள்வதைத் தடுத்து நிறுத்தக் கோரியும், மனு ஒன்றினை உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9